உ

கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சரு.] சருவசித்துஸு மாசிமீ [பகுதி-ச.

Vol. 45. February—March 1948 No. 4.

உள்ளுறை.

அந்சுவண்ணம்:—திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள். சுரு—எ0

மதுரைத்தமிழ்ச்சங்கநிருவாகஸபைத்தீர்மானங்கள்:— எக

திருவையாற்றுத் தென் கயிலாயத் திருக்கோயிற் கல்வெட்டுக்கள்:— } திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள் எஉ—எசு

பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்:— } ஸ்ரீ. சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் 37—44

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1948.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணன்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ...	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-சரு.] சருவசித்துஸ மாசிமீ [பகுதி-ச.
Vol. 45. February—March 1948 No. 4.

கல்வெட்டுக்களிலே காணப்படும் சில குழுவின்பெயர்கள்

I. அஞ்சுவண்ணம்

திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், ஆசிரியர்,
அண்ணுமலைபல்கலைக்கழகம்.

நம்நாட்டிலுள்ள தமிழ்க்கல்வெட்டுக்களிற் சில குழுவின்பெயர்கள் காணப்படுகின்றன. அவற்றுள் அஞ்சுவண்ணம், மணிக்கிராமம், பஞ்சாசாரியார், சங்கரபாடியார், வளஞ்சியர் என்பன குறிப்பிடத்தக்கனவாம். அவற்றை முறையே ஈண்டு ஆராய்வாம்.

கடற்கரைநகரங்களில் அஞ்சுவண்ணம் என்ற குழு ஒன்று இருந்தது என்பது கோட்டயச்செப்பேடுகளாலும் கொச்சிச்செப்பேடுகளாலும் அறியப்படுகின்றது. அன்றியும், இராமநாதபுரம் ஜில்லாவைச்சேர்ந்த திருவாடானைத்தாலூகாவிற் கடற்கரையிலுள்ள தீத்தாண்டதானபுரத்திற் காணப்படும் கல்வெட்டொன்றிலும் அக்குழுவின்பெயர் பயின்றுவருகின்றது. அவற்றை அடியிற் காண்க.

1. இவ்வாண்டு வேணுவாழ்கின்ற அய்யனடிகள் திருவடியும் அதிகாரரும் பிரகிருதியும்.........அஞ்சுவண்ணமும் புன்னைத் தலைப்பதியும் உள்வைத்து' (Travancore Archaeological Series Vol. II, page 67)

2. (a) 'அறுநூற்றுவரும் அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும் இரட்சிக்கக்கடவர். பள்ளியையும் பூமியையும் உலகும் சந்திராதித்தரும் உள்ளநாளெல்லாம் செலவுபத்திரத்தில் பட்டவண்ணம் செய்துகொள்ளக்கடவர்; அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும்' (I bid, வரிகள் 21—25)

(b) 'அன்றன்று படும் உல்கு அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும் இலக்கிச்சுவைப்பதாகவும்' (I bid, வரிகள் 34—35)

(c) 'அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும் இவகளுக்கு அன்னியாயமுண்டாயில் உல்கு துலாக்கூலி தடுத்தும் தங்கள் அன்னியாயம் தீர்த்துக்கொள்ளக்கடவர்' (I bid, வரிகள் 45—46)

(d) 'இந்நகரத்துக்குக் காராளராக நீரேற்றூர் அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமும்—இவருள் இரண்டுதலையாருங்கூடிச்செய்வதே கருமமாகவும்' (I bid, வரிகள் 48—49)

3. 'ஈசுப்பு இராப்பனுக்கு அஞ்சுவண்ணமும்................ அஞ்சுவண்ணப்பேறும்............கொடுத்தோம்' (Epigraphia Indica Vol. III. page 68.)

4. இவ்வூரில் இருக்கிற அஞ்சுவண்ணமும் மணிக்கிராமத்தோமும் ஆரியரில் சாமந்தபண்டசாலையும் ....பட்டாரியரும் தோயாவத்திரச்செட்டிகளும் தென்னிலங்கைவளஞ்சியரும் கைக்கோளரும் அசுவரும் வாணியரும் நீண்டகரையாருங் கூடி......... கோயில் திருமுன்பிலே நிறைவுறக்கூடியிருந்து' (Ins. 598 of 1926, தீத்தாண்டதானபுரக்கல்வெட்டு)

மேலேகுறிப்பிடப்பெற்ற செப்பேடுகளுள், கோட்டயச்செப்பேடுகள் சேரமான் தாணுரவியின் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழியில் வரையப்பெற்றுள்ளன. எனவே, மலையாளமொழி தோன்று

வதற்குமுன் சேரநாட்டில் தமிழே தாய்மொழியாக இருந்தகாலத்தில் கி. பி. பத்தாம்நூற்றுண்டின் முற்பகுதியில் அச்செப்பேடுகள் அளிக்கப்பட்டுள்ளன என்பது தேற்றம்.

கொச்சிச்செப்பேடுகள் பாஸ்காரரவிவர்மன்காலத்தனவாகும். அச்சேரமன்னன் முதல் இராசராசசோழன்காலத்திலிருந்தவனுவன். எனவே, அச்செப்பேடுகளும் தொன்மைவாய்ந்தவையென்பதில் ஐயமில்லை.

தீத்தாண்டதானபுரக்கல்வெட்டு, சடையவர்மன் வீரபாண்டியன் ஆட்சியில் கி. பி. 1269ல் பொறிக்கப்பெற்றதாகும்.

இனி, அச்செப்பேடுகளிலும் கல்வெட்டிலும் காணப்படும் அஞ்சுவண்ணம் என்பது எப்பொருளையுணர்த்துகின்றது என்று பார்ப்போம்.

டாக்டர் குண்டர்ட், டாக்டர் பர்னல் என்ற இரு பேராசிரியரும் அது, சேரநாட்டில் யூதர்கள் வாழ்ந்துகொண்டிருந்த இடமாக இருத்தல்வேண்டும் என்று கூறியுள்ளனர். எல்லிஸ் என்ற அறிஞர் அஃது ஐவகை உரிமைப்பட்டங்களை உணர்த்தும் என்பர்; கல்வெட்டிலாகாவின் தலைவர் ஒருவகையில் சுயேச்சைபெற்றிருந்த வணிகர்குழு என்று எழுதியுள்ளனர். டாக்டர் ஹூல்ட்ஸ் என்ற பேராசிரியர் அஃது ஓர் ஊரின் பெயர் என்று கருதியுள்ளார். வேறு சிலர், அஃது ஐவகைச்சாதியாரைக் குறிக்கும் என்பர். (Travancore Archacological Serie, Vol. II, pages 73 & 74) இவற்றை நோக்குமிடத்து, அதன் உண்மைப்பொருள் ஒருதலையாகத் துணியப்படவில்லை என்பது தெள்ளிது.

கோட்டயம் என்பது மேல்கடலோரத்திலுள்ள ஒரு சிறந்த பட்டினமாகும். தீத்தாண்டதானபுரம் என்பது கீழ்கடற்கரையிலுள்ளதோர் ஊர். இவை முற்காலத்தில் வாணிகத்திற் சிறந்த கடற்றுறைப்பட்டினமாக இருந்தன என்று தெரிகிறது. ஆகவே அவ்வூர்களிலிருந்த அஞ்சுவண்ணம் என்பது ஒருவகை வணிகர்

குழுவாக இருத்தல்கூடும் என்று கருதுவதற்கு இடம் உளது. அன்றியும், 'அஞ்சவண்ணமுடைய ஈசுப்பு இராப்பனுக்கும்' என்ற தொடரால், அவ் வஞ்சவண்ணம் என்பது கிருத்துவவணிகர்குழுவின்பெயராக இருத்தல்கூடுமோ என்ற ஐயம் நிகழ்கின்றது. மேல்கடலோரத்திலுள்ள பட்டினங்களில் மேனாட்டுக் கிருத்துவவியாபாரிகள் பண்டைக்காலத்தில் வாணிகத்தின்பொருட்டு வந்து தங்கியிருந்தசெய்தியைச் சரித்திரம்வல்லார் அறிவர். ஆகவே, அக்கொள்கைக்கும் சிறிது இடமுளது எனலாம்.

இந்நிலையில், தென்வட்டக்கல்வெட்டிலாகாவின் தலைவர், அஞ்சுவண்ணம் என்பது அஞ்சுமான் என்ற உருதுமொழியின் திரிபாக இருக்கலாமோ என்று ஐயுறுகின்றனர் (A. R. E for 1926-27. part II),

திருவாளர் ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையவர்கள் B.A., B.L., வெளியிட்டுள்ள களவியற்காரிகை என்ற நூலில் அதன் உரையாசிரியர் இறந்தொழிந்த தொன்னூல்களிலிருந்து பல பாடல்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டியுள்ளனர். அவற்றுள் பல்சந்தமாலை என்ற நூலிலிருந்து எடுத்தாளப் பெற்றுள்ள சில பாடல்கள் அஞ்சுவண்ணம் என்பதைப்பற்றி அறிந்துகோடற்குப் பெரிதும் உதவுகின்றன. அவை,

'கலைமதி வாய்மைக் கலுழ்பா வழிவருங் கற்பமைந்த
தலைமைய ரேழ்பெருந் தேரங்க மும்பெற்ற கநதசசு*
மலையன மாமதில் வச்சிர நாடன்ல வாணுதல்தன்
முலையிணை தோய்ந்ததெல் லாங்கன வேயென்று முன்னுவனே' (1)

'இயவன ராசன் கலுபதி தாழத லெண்ணவந்தோர்
அயன்மிது தானைய ரஞ்சுவண் ணத்தவ ரஞ்சலென்னக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய்கொய்துபோம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே' (2)

*இவ்வுடுக்குறியிட்ட இடங்களிற் சரியானபாடம் புலப்படவில்லை.

'பிறையார் நறுநுதற் பேதைதன் காரணத் தாற்பெரும
மறைகா ளிரவில் வருவது நீயொழி வச்சிரநாட்
டிறையா கியகலு பாமுத லானவர் யானைகணின்
றறைவாரும் விஞ்சத் தடவிகள் சூழு மணிவரையே' (3)

'வான து ளாணக் கொடையா லுலகை வளர்த்தருளும்
சோனகர் வாழுஞ் செழும்பொழில் சூழந்து பாரனையாள்
தானணி வாணுதல் கண்டும் பகலே தனித்தனியே
மானமி லாதிரை தேரும் யறவைக் டாமகிழ்ந்தே' (4)

'வில்லார் நுதலியு நீயுமின் றேசென்று மேவுதிர்சு
தெல்லா முணர்ந்தவ ரேழ்பெருந் தோரங்கத் தியவனர்கள்
அல்லா எனவந்து *சத்தியுநகதாரவகை தொழுஞ்சீர்
கல்லார் பயிலும் பழனங்கள் சூழ்தரு நாட்டகமே' (5)

என்பனவாம்.

இவற்றுள் இரண்டாம்பாடலால் யவனராசனுகிய கலிபாவின் வழியினர் அஞ்சுவண்ணத்தவர் என்பதும் ஐந்தாம்பாடலிலுள்ள 'யவனர்கள் அல்லா எனவந்து' என்ற தொடரால் அன்னோர் முகம்மதியராயிருத்தல்வேண்டும் என்பதும் நன்கு வெளியாகின்றன. எனவே, முஸ்லீம்மரபினரே அஞ்சுவண்ணத்தவர் என்று வழங்கப் பெற்றுள்ளனர் என்பது தெள்ளிது. இச்செய்தியை நான்காம் பாடலில் பயின்றுவரும் 'சோனகர்' என்ற சொல் உறுதிப்படுத்துதல் அறியத்தக்கது. மேலே குறித்துள்ள பாடல்களிலே காணப்படும் கலும்பா, கலுபதி, கலுபா என்பன முன்னே துருக்கிவேந்தனுக விளங்கிய காலிபை (Caliph) குறிப்பனவாகும்.

இனி, தஞ்சைமாநகரிலுள்ள 'சரஸ்வதிமால்' என்ற புத்தக சாலையிற் காணப்படும் பழைய பாடற்றிரட்டொன்றில்,

'குடக்கினிற் றுரங்கமும் வடக்கினிற்க லிங்கமும்
குணக்கினிற் பசும்பொனும் குளித்ததெற்கி லாரமும்
அடிப்பரப் புடைக்கலத் தனேகவண்ண மாகவந்
தஞ்சுவண்ண முந்தழைத் தறத்தின்வண்ண மானவூர்

கடற்கரைக் குவித்திடு சந்தனத்தை யிந்துடன்
கலந்திறைக்கு மந்தியைக் கனன்றுமு சுவின்குலம்
புடைப்பதற் கெழுந்துகை முறுக்கலு மிழுக்கிவாய்
புக்கமுத்தை விட்டெறிந்து பூகமேறு நாகையே'

என்ற பாடல் காணப்படுகிறது.

இதிற் பயின்றுவரும் அஞ்சுவண்ணம் என்பது கீழ்கடற்கரையிலுள்ள நாகபட்டினத்தில் வாணிகத்தின்பொருட்டுத் தங்கியிருந்த முகம்மதியர்குழுவினைக் குறிப்பிடுதல் உணரற்பாலதாம். இந்நாளிலும் நாகை, சிறந்த வாணிகத்துறையாய் முகம்மதியர்குழுவினைத் தன்னகத்து மிகுதியாகக்கொண்டுவிளங்குவது யாவரும் அறிந்ததே. ஆகவே கோட்டயம் தித்தாண்டதானபுரம், நாகப்பட்டினம் முதலான கடற்றுறைப்பட்டினங்களில் முற்காலத்தில் நிலவிய முஸ்லீம்வணிகர்குழுவே அஞ்சுவண்ணம் என்று செப்பேடுகளிலும் கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பெற்றுள்ளது என்பது நன்குபுலப்படுதல் காண்க.

முஸ்லீம்மரபினர் அஞ்சுவண்ணத்தவர் என்னும் பெயர் எய்தியமைக்குரிய காரணம் யாது? என்பது தெளிவாகத்தெரியவில்லை. 'எது இஸ்லாம்?' ('what is Islam?') என்ற ஆங்கிலநூலில் இஸ்லாம்மார்க்கத்திற்குரிய ஐம்பெருங்கொள்கைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை (1) கடவுள் ஒருவரே; அவருடைய தூதர் முகம்மது என்பார் (2) கடவுள் வழிபாடு (3) உண்ணாவிரதம் (4) ஏழைகட்கு அறஞ்செய்தல் (5) மெக்கா யாத்திரை என்பன. இவ்வைந்தையும் தம் சமயக்கொள்கைகளாகக்கொண்டு ஒழுகிவந்த காரணம்பற்றி முஸ்லீம்மரபினர் அஞ்சுவண்ணத்தவர் என்று முற்காலத்தில் வழங்கப்பெற்றிருப்பார்களோ என்ற ஐயம் நிகழ்கின்றது; ஒருதலையாகத் துணிதற்கியலவில்லை.

1948-ஆம்ௗு ஜனவரிீ 23உ (ஸர்வதாரிௗு தைமீ 10உ) மாலை 10-மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக ஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.
உப-அக்கிராசனாதிபதி.

2. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.

3. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் M.A., B.L.
—கூட்டுக்காரியதரிசி.

4. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1 சங்கத்தின் 1947-ம்ௗு ஜூன்மீ முதல் டிசம்பர்மீ முடிய உள்ள வரவுசெலவுகணக்குகளும், 1946—1947-ம் வருஷ வருஷாந்தக் கணக்குகளும் அங்கீகரிக்கலாயின.

2 மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராக வேண்டுமெனக் கோரிய சென்னை அட்வொகேட் மகா-௱-௱-ஸ்ரீ D. ராமஸ்வாமிஐயங்கார் B.A., B.L. அவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3 மதுரைஜில்லா சென்ட்ரல் கோவாபரேடிவ்பாங்கில் வட்டிக்குக் கொடுத்துள்ள சங்கம் பிக்ஸெட்டெபாஸிட் தொகை ரூ 25011—5—0யும் ஷை பாங்கிலேயே மறுபடியும் ஒருவருஷத்துக்குப் புதுப்பிக்கவேண்டுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்வதாகத் தீர்மானிக்கலாயிற்று.

4 சிவகங்கை, சங்கம் ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைநடத்தப்பெறும் தலங்களுள் ஒன்றாக ஏற்படுத்தலாயிற்று.

5 ஸ்ரீமான் திருநாராயணையங்காரவர்கள் காலஞ்சென்றதுபற்றிச் சங்கக் காரியநிர்வாகஸபையார் தங்களுடைய ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்து, அவர்கள் சுமார் 45வருஷகாலமாக மதுரைத்தமிழ்ச்சங்கத்தில், சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியராகவும் செந்தமிழ்ப்பத்திராசிரியராகவும் சங்கப்பரீக்ஷைகளுக்குப் பரீக்ஷகராகவும் இருந்து தமிழ்க்கல்விவிஷயமாக அளவற்ற சேவைகள்செய்துவந்ததகுறித்து அன்னாரைப் பாராட்டி ரிக்கார்டில் பதிவுசெய்தனர்.

மதுரைத்தமிழ்ச்சங்கம், 23—1—'48.

T. C. ஸ்ரீநிவாஸையங்கார்,
உப-அக்கிராசனாதிபதி.

திருவையாற்றுத் தென்கயிலாயத் திருக்கோயிற் கல்வெட்டுக்கள்

[திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.]

முன்னுரை

தென்கயிலாயத்திருக்கோயில் என்பது திருவையாற்றில் ஐயாறப்பர் இனிது எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குத் தென்பால் பெரியபுறத்திருச்சுற்றிலையில் அமைந்துள்ளதொரு அழகிய கற்கோயிலாகும். இக்கோயில் கருப்பஇல், அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்னும் மூன்று பெரும்பிரிவுகளையுடைய்து. உச்சியம்போதில் சிவனடியார்க்கு (மாகேசுவரர்க்கு) அமுது அளித்தற்கும் மழைநாளில் திருக்கோயிலை வலம்வருதற்கும் ஆக அமைக்கப்பெற்ற திருச்சுற்றுமாளிகை சூழப்பெற்றது. வாயில் முன்பக்கத்தில் மூன்றுநிலைக்கோபுரத்துடன் விளங்குவது. இத் தகைய பெருஞ்சிறப்பினையுடைய இக்கோயிலே சிவநெறிக்குரவ ராகிய திருநாவுக்கரசருக்கு இறைவன் வடகயிலையில் எழுந்தருளி யிருக்கும் திருக்கோலத்தைக் காட்டியருளிய இடமாகும். இங்கே ஆளுடைய அடிகளின் அருளொழுகும் பிரதிமம் நிற்குங்கோலத் துடன் மகாமண்டபத்தில் எழுந்தருளுவிக்கப்பெற்றிருக்கின்றது. இம்மண்டபத்து மேற்றளத்தின் அடிப்பாகத்தில் திருநாவுக்கரசர் தில்லைச்சிற்றம்பலத்தை வணங்கியதுமுதல் திருவையாற்றிலே கயிலைக்காட்சியைக் கண்டது ஈறாகவுள்ள நிகழ்ச்சிகளையுணர்த் தும் பண்டையோவியங்கள் கண்டார்வியக்குந்தன்மையுடையன வாய்த் தீட்டப்பெற்றிருக்கின்றன. கருப்பஇல்லில் எழுந்தருளி யிருக்கும்சிவலிங்கப்பெருமானுக்குப் பின்பக்கத்திலுள்ள இறைவன்

இறைவி திருமேனிகள்* வடகயிலையிலே சிவபெருமான் சத்தியும் சிவமுமாய் எழுந்தருளியிருக்கும்பெற்றியை விளக்குவனவாகும்.

இத்திருக்கோயிலில் ஏழு கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஆறுகல்வெட்டுக்களின் சுருக்கங்கள் ஆண்டு அறிக்கைகளில் வெளிவந்துள்ளன. எஞ்சிய ஒன்றை 5—3—48இல் கல்வெட்டுத்துறையாளர் திரு. N. இலட்சுமிநாராயணராவ் M. A. அவர்கள் (Superintendent for Epigraphy) படியெடுத்துச்சென்றிருக்கின்றனர். கல்வெட்டுத்துறையாளரால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களுள் கங்கைகொண்டசோழனின் இரண்டாம் மகனாகிய ஸ்ரீராஜேந்திரதேவரது கல்வெட்டின் மூலம்மாத்திரம் தென்னிந்தியக்கல்வெட்டின் ஐந்தாந்தொகுதியில் வெளிவந்துள்ளது. தருமபுரஆதீனத்தில் இருபத்தைந்தாம்பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் உயர்சைவத்திரு மகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படி, யான் இக்கோயிற்கல்வெட்டுக்களையெல்லாம் படித்து எழுதினேன். அவைகளிலே கண்டசெய்திகள் தமிழ்நாட்டார்க்குப் பயன்படுமென்று எண்ணி நம் செந்தமிழில் வெளியிடலானேன்.

கல்வெட்டும் சரித்திரமும்

இத்திருக்கோயிலில் உள்ள ஏழு கல்வெட்டுக்களுள் ஒன்று கிருஷ்ணராஜஉடையாரைப்பற்றியது. ஏனையவைகளெல்லாம் சோழநாட்டையாண்ட பிற்காலத்துச் சோழமன்னர்கள்காலத்தனவாகும். இச்சோழமன்னர்கள்கல்வெட்டுக்களிலும், கருப்ப இல்லின் கிழக்குப்புறச்சுவரில் உள்ள 'திருமன்னிவளர இருநிலமடந்தையும்'—என்று தொடங்கப்பெறும் கோப்பரகேசரி இராசேந்திர சோழதேவரின் (கங்கைகொண்டசோழரின்) முப்பத்தொன்றும்

---

* கோயிலில் எழுந்தருளுவித்த கடவுள்வடிவங்களுக்குத் திருமேனிகள் என்றும், மக்கள்வடிவங்கட்குப் பிரதிமம் என்றும் பெயர்கள் வழங்கிவந்துள்ளன. இவைகளைக் கல்வெட்டுக்களினால் அறியலாம்.

ஆண்டில் பொறிக்கப்பெற்றதே பழமையானதாகும். அக் கல்வெட்டிலுள்ள "வடகரை ராஜேந்திரசிங்கவளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்று நம்பிராட்டியார் பஞ்சவன்மாதேவி.........யாற்று எடுப்பித்தருளுகின்ற திருக்கற்றளி தென்கயிலாயமுடையார்கோயில்.........ப் பொன்னும் வெள்ளியும் தராவும் உள்ளிட்ட பரிகலபரிச்சின்னங்களுக்கு" என்னும் பகுதியால், முதலாம் இராசேந்திரசோழதேவரின் (கங்கைகொண்டசோழரின்) மனைவியாராகிய பஞ்சவன்மாதேவியாரால் இக்கோயில் கட்டப்பெற்றது என்று தெரிகிறது. அம் முதலிராசேந்திரசோழதேவர் கி. பி. 1014 முதல் கி. பி. 1042 வரை ஆண்டவராவர். அவரது ஆட்சியாண்டு முப்பத்தொன்றில் இக்கோயில் கட்டப்பெற்றதென்று பெறப்படுகின்றமையால், இக்கற்றளி எடுப்பிக்கப்பெற்று இற்றைக்குத் தொள்ளாயிரத்துமூன்று (903) ஆண்டுகள் ஆகின்றன.

அர்த்தமண்டபத்தின் கிழக்குப்புறச்சுவரிலுள்ள

"ஸ்வஸ்திஸ்ரீ பஞ்சநதி வாணன் திருவுருவும் பார்வதியாம்
அஞ்சலை உமையுருவும் ஐயாற்றே—செஞ்சேவை
(வாச)த்தான் வானவன்மா ராயன் வெளிப்படுத்தான்
தேசத்தா னே(ன்)னச் சிறந்து"

என்னும் கல்வெட்டால், இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருப்பெயர் பஞ்சநதிவாணன் என்றும் இறைவியாரது திருப்பெயர் அஞ்சலை என்றும் பெறப்படுகின்றன. மேலும் இக் கல்வெட்டால் இத்திருவுருவங்களை மறைந்தநிலையினின்று வெளிப்படுத்தியவன் சேவைநகரினனான வானவன்மாராயன் என்றும் அறியக்கிடக்கின்றது.

மகாமண்டபத்தின் கிழக்குப்புறச்சுவரில் உள்ள,

"பறந்தலை கவர்ந்து மாப்பெரும் புகழ்மிகவளர்த்த கோப்பர கேஸரிபந்மரான உடையார் ஸ்ரீராஜேந்திரதேவர்க்கு யாண்டு

ஈ-ஆவது (மூன்ருவது) ராஜேந்திரசிங்கவளநாட்டுப் பொய்கை நாட்டுத் திருவையாற்றுத் தென்கயிலாயமுடையார்கோயில் ஆடவல்லார்க்கு நம்பிராட்டியார் த்ரைலோக்கியமுடையார் அதிகாரிச்சி முத்தானபொங்கங்கை சாத்தியருளத் திருக்கழுத்துக்கு இட்ட சண்பகங்காறை ஒன்றுங் குடிஞைக்கல்லால் பொன் அறுகழஞ்சும் இதில் கட்டின மாணிக்கம் ஒன்றும் வயிரமிரண்டும் உட்பட நிறை அறுகழஞ்சேய் மஞ்சாடியும் அஞ்சுமாவும், திருக்கைக்குச் சாத்தியருள இட்ட திருக்கைக்காறை பொன் இருகழஞ்சாகத் திருக்காறை நாலினல் பொன் எண்கழஞ்சும் திருவடிக்காறை ஒன்று பொன்முக்கழஞ்சாகப் பொன் அறுகழஞ்சும் ஆகப் பொன் இருபதின்கழஞ்சும், இது மாணிக்கம் ஒன்றும், வயிரம் இரண்டும் உட்பட நிறை இருபதின்கழஞ்சேய்மஞ்சாடியும் அஞ்சுமாவும் இவர் நம்பிராட்டியார்க்குச் சாத்தியருள இட்ட ஒற்றைத் தாலி மணிபதின்று ஒருபதுமுடையின......ங்கு ஒன்றும் கொக்குவாய் ஒன்றும் படுகண் ஒன்றும், கோத்தநாணுட்பட நிறை முக்கழஞ்சரையேயிரண்டு மஞ்சாடியும் அஞ்சுமாவும், திருக்காதுக்குச் சாத்த இட்ட காறைகண்டி இரண்டினல் பொன் அரைக்கழஞ்சே நாலுமஞ்காடியும் அஞ்சுமாவும் ஆகப் பொன் ” [Taken from S. I. I. Volume V.]

என்னும் கல்வெட்டுப்பகுதிகளால், முதலாம் இராசேந்திர சோழதேவரின் (கங்கைகொண்டசோழதேவரின்) இரண்டாம் மகனுகிய விசயராசேந்திரசோழரின் மனைவியாரின் திருப்பெயர் திரைலோக்கியமுடையார் என்பதும், இக்கோயிலில் ஆடவல்லார் (நடராசப்பெருமான்) அவர்தம் பிராட்டியார் இவர்களுடைய திருமேனிகள் இருந்தன என்பதும், ஆடவல்லார்க்குத் திருக்கழுத்து திருக்கை திருவடி இவைகளுக்குச் சாத்தியருளப்பெற்ற அணிகலன்கள் முறையே சண்பகங்காறை, திருக்கைக்காறை, திருவடிக்காறை என்றபெயர்களுடன் வழங்கிவந்தன என்பதும், அவர்தம் பிராட்டியார்க்கு இக்காலம்போலல்லாமல் ஒற்றைத்தாலியே சாத்தியருளப்பெற்றுவந்ததென்பதும், அவர்தம் திருக்காதணியின்

பெயர் காறைகண்டி என்பதும், அக்காலம் பொன் மாணிக்கம் வயிரம் இவைகள் குடிஞைக்கல் என்னும் அளவையால் நிறுக்கப் பெற்றுவந்தன என்பதும் வெளியாகின்றன.

மகாமண்டபத்தின் மேற்குப்புறச்சுவரில் மிகவும் சிதைந்த நிலையில் உள்ள திரிபுவனசக்கரவர்த்தி இராசராசதேவர், திரிபுவனசக்கரவர்த்தி குலோத்துங்கசோழதேவர்கல்வெட்டுக்கள் கோயிலில் நுந்தாவிளக்குகளும் சந்திவிளக்குகளும் வைப்பதற்குக் கொடுக்கப்பட்ட நிபந்தங்களைத் தெரிவிக்கின்றன.

இக்கோயில் கீழைத்திருச்சுற்றுமாளிகையில் தென்பாலுள்ள கடைசித் தூணுக்கு அடுத்தவடபால் உள்ள தூணில், "ஸ்வஸ்திஸ்ரீ இத்தன்மம் கிருஷ்ணராஜஉடையார்" என்று பொறிக்கப்பெற்றதி லிருந்து இத்திருச்சுற்றுமாளிகை கிருஷ்ணராஜஉடையாரால் எடுப் பிக்கப்பெற்றதென்று தெரிகின்றது.

முடிப்புரை

சோழமன்னர்களேயன்றி, அவர்தம் தேவிமாரும் பெருஞ் சைவப்பற்றுடையராயிருந்தனர். சோழமாதேவியர்களின் பெருஞ் சைவப்பற்றை எவ்வாறு எடுத்தியம்புவது? ஐயாறப்பர்கோயிலுக்கு வடபால் பெரியபுறத்திருச்சுற்றிலேயிலுள்ளதும் முதலிராசராச சோழரின்மனைவியாரால் எடுப்பிக்கப்பெற்றதுமாகிய ஓலோக மாதேவீச்சரத் திருக்கோயிலைப்பற்றிச் சில ஆண்டுகளுக்குமுன் நம் செந்தமிழில் எழுதியுள்ளேன். இந்த ஓலோகமாதேவீச்சரத்தை எடுப்பித்த ஓலோகமாதேவியாரின் மருமகளாகிய பஞ்சவன்மா தேவியாரே தென்கயிலாயத் திருக்கோயிலை எடுப்பித்தவர். இவ் விருபெருந்தேவியர்களின் புகழ்களுக்கும் நிலைக்களமாய்விளங்கும் இவ்விருதிருக்கோயில்களையும் போற்றிப் புரந்துவருதல் தமிழ் மக்களது தனிப்பெருங்கடமையாகும்.

59 இழையார் வனமுலை வீங்கி யிடையிறு கின்றதிற்றப்
பிழையா ளமக்கிவை கட்டுண்க வென்பது பேச்சுக்கோலாம்
கழையார் கழுக்குன்ற வாணனைக் கண்டனைக் காதலித்தாள்
குழையார் செவியொடு கோலக் கயற்கண்கள் கூடியதே.

பதவுரை:—கழையார் கழுக்குன்றவாணனை - மூங்கிற்காடடர்ந்த திருக்கழுக்குன்றத்தில் அமர்ந்திருப்பவனை, கண்டனை - நீலகண்டனை, காதலித்தாள், குழையார்செவியொடு - குழையையணிந்த காதினொடு, கோலக் கயற்கண்கள் கூடியது - அழகிய கயல்போலும் கண்களின் நாட்டம் கூடியது, இழை ஆர் வனமுலை வீங்கி - ஆபரணங்களையணிந்த தனங்கள் விம்ம, இடை இறுகின்றது - இடை ஒடியாநின்றது, இற்றால் - (அவ்வாறு இடை) ஒடியுமாயின், பிழையாள் - உயிர்தரித்திருக்கமாட்டாள், நமக்கு இவை கட்டுண்க என்பது - நமக்கு இவை கட்டுப்படுக என்பது, பேச்சுக்கோலாம் - பேச்சாகுமோ?

குறிப்புரை:—வாணன் - வாழ்நன். வீங்கி - வீங்க. இது தோழி கூற்று. (ருக)

60 கூடிய தன்னிடத் தானுமை யாளிடத் தானையையா
றீடிய பல்சடை மேற்றெரி வண்ண மெனப்பணிமின்
பாடிய நான்மறை பாய்ந்தது கூற்றைப் படர்புரஞ்சுட்
டாடிய நீறுசெஞ் சாந்திவை யாமெம் மயனெனவே.

பதவுரை:—ஆன்கூடிய தன்னிடத்து - விடைவாகனத் தெழுந்தருளியுள்ள தன்வடிவத்தில், உமையாள் இடத்தானை - உமாதேவியை இடப்பாகத்தே கொண்டிருப்பவனை, ஈடிய பலசடைமேற்று ஐயாறு - நெருங்கிய பலவாகிய சடையின்மேலது அழகிய (கங்கையாகிய) ஆறு, வண்ணம் எரி - (திருமேனி) அங்கியின் நிறமுடையது, பாடிய நான்மறை - (அவ்விறைவனால்) பாடப்பட்டவை நான்குவேதங்களும், பாய்ந்தது கூற்றை - (அவ்விறைவன்) பாய்ந்து உதைத்தது கூற்றுவனை, படர்புரம் சுட்டு ஆடியநீறு செஞ்சாந்து - ஆகாயத்திலியங்கும் திரிபுரங்களையெரித்து அபிஷேகம்பண்ணிக்கொண்ட நீறே செவ்விய சந்தனம், இவை எம் ஐயன் என - இவையே எம் இறைவனியல் என்று, பணிமின் - வணங்குவீராக.

குறிப்புரை:—படர்புரம்: 'திரிபுரமெரித்த விரிசடைக்கடவுள்' என்றார் பிறரும். ஐயன் அயன் என்றானது போலி. (சுo)

61 அயமே பலியிங்கு மாடுள தாணுவோர் குக்கிக்கிடப்
பயமே மொழியும் பசுபதி யேறெம்மைப் பாய்ந்திடுமாற்
புயமேய் குழலியர் புண்ணியர் போமி னிரத்தல்பொல்லா
நயமே மொழியினும் நக்காம மாவும்மை நாணுதுமே.

பதவுரை:—மாடு உள தாணு - இடபத்தையுடைய இறைவனே!, பசுபதி - பசுக்க(ளாகிய உயிர்க)ளுக்குத் தலைவனே!, (நீர்) ஓர் குக்கிக்கு இட இங்கு பலி ஐயமே-(உமது) ஒருவயிற்றுக்கு இட இங்கே பெறுவதும் பிச்சையுணவே, (அன்றி) மொழியும் - (உம்முடைய) பேச்சுக்களும், பயமே - அச்சத்தை விளைப்பனவே, (அதன்மேலும்) ஏறு - உமது விடை, எம்மை - (பிச்சையிடவரும்) எங்களை, பாய்ந்திடும் - பாயாநிற்கும், புயம் ஏய் குழலியர்- தோளில் தாழ்ந்த கூந்தலையுடையராகிய இவர், புண்ணியர் - புண்ணிய கருமங்களைச்செய்கின்ற தவமகளிர், போமின் - (ஆதலால் நீர்) இவர்களை விட்டு விலகிச்செல்லுவீராக, இரத்தல் பொல்லாது - நீர் யாசித்தல் கொடியது, நயமே மொழியினும் - (அஞ்சுதக்கனகூறாது) நல்லனவற்றையே நீர் கூறினும், நகு (தல்) ஆம் - (அவமதிச்) சிரிப்பு எழும். உம்மை நாணுதும் - உம்விஷயத்தில் (நாங்கள்) வெட்கமடைகின்றோம்.

குறிப்புரை:—ஐயம் அயம் என்றானது போலி. பொல்லாது என்பது ஈறுகெட்டுநின்றது. அம்மா - வியப்பிடைச்சொல். நகு (தல்) ஆம் என்பது நக்காம் என்றானது விகாரம். தாணு-அசைவற்றவன்; ஊழியினும் நிலைபெறுபவன். இது பாங்கிகூற்று.

62 நாணு நடக்க நலத்தார்க் கிடையில்லை நாமெழுக
ஏணு ரிருந்தமி ழான்மற வேனுந் நினைமினென்றும்
பூணுர் முலையீர் நிருத்தன் புரிசடை யெந்தைவந்தாற்
காணு விடேன்கண் டிரவா தொழியேன் கடிமலரே.

பதவுரை:—பூணுர் முலையீர் - ஆபரணமணிந்த தனங்களையுடைய பாங்கியர்களே!, ந(ல்)ல தார்க்கு - (இறைவன் அணிந்த) நல்ல (கொன்றை) மாலையைப்பெறும்பொருட்டு, நாள் நாம் நடக்க இடையில்லை - தினந்தோறும் நாம் செல்வதற்குச் சமயம் வாய்ப்பதில்லை, நாம் எழுக - அச்சம் ஒழிக, நிருத்தன் புரிசடை எந்தை - நடனமாடும் புரிசடைக்கடவுளாகிய எமது தலைவன், வந்தால் - இங்கு வரின், என்றும் மறவேனும் - (அவரை) எக்காலத்தும் மறவாத யானும், ஏண் ஆர் இருந்தமிழால் - வலிமிக்க பெருமையுடைய தமிழினால், காண(து)விடேன் - காணுதொழியேன் = காண்பன், கண்டு, கடிமலர்

இரவாதொழியேன் - மணம்பொருந்திய (அவர்சூடிய) மாலையை வேண்டாது விடேன்=வேண்டுவேன், நினைமின் - இதை நீங்கள் மனத்துட்கொள்ளுங்கள்.

குறிப்புரை:- நாளும் நாம் நடக்க என்றிருக்கற்பாலது செய்யுள்விகாரத்தால் உம்மைதொக்கு நாணுநடக்க என நின்றது. நாம் - அச்சம். இது தலைவி கூற்று. (சுஉ)

63 கடிமலர் கொன்றை தரினும்புல் லேன்கலை சாரவோட்டேன்
முடிமலர் தீண்டின் முனிவன் முலைதொடு மேற்கெடுவன்
அடிமலர் வானவ ரேத்தநின் றய்க்கழ கல்லவென்பன்
தொடிமலர் தோடோடு மேற்றிரு வாணை தொடங்குவனே.

பதவுரை:— கடி மலர் கொன்றை தரினும் - மணம்விரிந்த கொன்றை மாலையை (இறைவர்) தந்தாலும், புல்லேன் - (அவரை) அணையேன், கலை சார ஓட்டேன்-(யான் அணையாமையால் அவர் என்னை வலிந்தணைய நினைந்து என்) ஆடையினைத் தீண்டவிடேன், முடிமலர் தீண்டின்-(என்) முடியிலுள்ள பூவை (அவர்) தொடின், முனிவன் - சினங்கொள்வேன், முலைதொடுமேல் - (என்) தனங்களை (அவர்) தொடுவரேல், கெடுவன் - (அதனால்) நிலையழிபவளாகிய யான், (இறைவனைநோக்கி) அடிமலர் வானவர் ஏத்த நின்றாய்க்கு - பாதமாகிய தாமரையைத் தேவர்கள்வணங்கநின்ற நினக்கு, அழகல்ல என்பன்-(இவ்வாறு என் தனங்களைத் தொடுவது) முறையன்றென்பேன், தொடி மலர் தோள் தொடுமேல் - வளைவிளங்கும் கையினைத் தொடுமெனின், திரு வாணைதொடங்குவன் - ஆணையிடத்தொடங்குவேன்.

குறிப்புரை:—ஆணை - பாகதச்சிதைவு. இதுவும் தலைவிகூற்று. (சுங)

64 தொடங்கிய வாழ்க்கையை வாளா துறப்பர் துறந்தவமே
அடங்கிய வேட்கை யரன்பா லிலரறு காற்பறவை
முடங்கிய செஞ்சடை முக்கண ஞர்க்கன்றி யிங்குமன்றிக்
கிடங்கினிற் பட்ட கராவனை யார்பல கேவலரே.

பதவுரை:-பல கேவலர், தொடங்கிய வாழ்க்கையை-தாம் மேற்கொண்ட இல்வாழ்க்கையை, வாளா துறப்பர் - வீணே (பயனின்றிக்) கைவிடுவர், துறந்து - (அவ்வாறு) துறந்தும், அரன்பால் - இறைவனிடம், அடங்கிய காதல் இலர்-(தீய நெறியிலேசெல்லாது) அடங்கிய காதல் இல்லாதவராயினர்,

அவமே - (இவர் துறவு) பயனற்றதே; (இவர்) அறுகாற்பறவை முடங்கிய செஞ்சடை முக்கணனுர்க்கு அன்றி - ஆறுகாலையுடைய வண்டுமொய்க்கும் வளைந்த சிவந்த சடையினையும் மூன்று கண்களையும் உடைய இறைவனுக்கு (ச் செய்யும் தொண்டும்) இன்றி, இங்கும் அன்றி - இவ்வுலகவாழ்வும் இன்றி, கிடங்கினிற்பட்ட கரா அனையார் - அகழியிலே பொருந்திய முதலையை ஒப்பர்.

குறிப்புரை:—துறந்தும் என்பதனுள் உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது. உலகப்பற்றறுப்பது இறைவனைப்பற்றுதற்கே; இறைவனைப்பற்றுதவழி உலகப்பற்றையொழித்தும் பயனில்லையென்றவாறு. (சுச)

65 வலந்தான் கழலிடம் பாடகம் பாம்பு வலமிடமே
கலந்தான் வலநீ றிடஞ்சாந் தெரிவலம் பந்திடமென்
பலந்தார் வலமிட மாடகம் வேல்வல மாழியிடம்
சலந்தாழ் சடைவலந் தண்ணங் குழலிடஞ் சங்கரற்கே.

பதவுரை:—சங்கரற்கு, வலம் - வலத்தாளின்கண், கழல் - வீரக்கழல், இடம் - இடப்பாதத்தின்கண், பாடகம், வலம் - (அவனது திருமேனியின்) வலப்பாகத்து, பாம்பு, இடம் - இடப்பாகத்தின்கண், கலம் - அணிகலம், வலம் நீறு - வலப்பாகத்தில் விபூதி, இடம் சாந்து-இடப்பாகத்திற் சந்தனம், வலம் எரி - வலக்கரத்தில் தீ (மழு), இடம் பந்து - இடக்கரத்திற் பந்து, வலம் என்புதார் - வலப்பாகத்து என்புமாலை, இடம் (என்பு) அல் ஆடகம் தார் - இடப்பாகத்து என்பல்லாத பொன்னாரம், வலம் வேல் - வலக்கரத்துச் சூலப்படை, இடம் ஆழி - இடக்கரத்துச் சக்கரப்படை, வலம் சலம் தாழ் சடை - வலப்பாகத்து நீர்தங்கிய சடை, இடம் தண் அம் குழல் - இடப்பாகத்துக் குளிர்ந்த அழகிய கூந்தல்.

குறிப்புரை:—சங்கரனுக்கு வலத்தில் கழல், பாம்பு, நீறு, எரி, என்பு, வேல், சடை (ஆகிய) இவை உண்டு என்றும் இடத்தில் பாடகம், கலம், சாந்து, பந்து, ஆடகம், ஆழி, குழல் (ஆகிய இவை உண்டு என்றும் கூட்டி முடிக்க. இது இறைவன் உமையொடுகூடிநின்றமை கூறியவாறு. இவ்வாறே

"தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"

என்று மணிவாசகர் அருளியதும் காண்க. (சுரு)

66 சங்கரன் சங்கக் குழையன் சரணா விந்தந்தன்னை
அங்கரங் கூப்பித் தொழுதாட் படுமின்றொண் டீர்நமனார்
கிங்கரர் தாஞ்செய்யுங் கீழா யினமிறை கேட்டலுமே
யிங்கர மாயிர மீரவென் னெஞ்ச மெரிகின்றதே.

பதவுரை:—தொண்டீர் - தொண்டர்களே !, நமனார்கிங்கரர்தாம் - யமனுடைய குற்றேவலாட்கள், செய்யும்-செய்கின்ற, கீழாயின மிறை கேட்டலும் - தாழ்ந்த தீயசெயல்களைக் கேட்டஅளவில், என் நெஞ்சு - என் மனமானது, அரம் ஆயிரம் ஈர - ஆயிரம் அரக்களால் அறுக்க, எரிகின்றது - காந்துகின்றது, (ஆதலால் இயமதண்டனை நீங்க) சங்கரன் - சங்கரன் என்னும் பெயரையுடையவனும், சங்கக்குழையன் - சங்கினாலாகிய காதணியையுடையவனுமாகிய சிவபெருமானுடைய, சரணாரவிந்தந்தன்னை - பாததாமரைகளை, அம் கரம் கூப்பித் தொழுது - அழகிய கைகளைக் குவித்துத் தொழுது, ஆட்படுமின் - அடிமைப்படுங்கள்.

குறிப்புரை:—சங்கரன் - எல்லாஉயிர்களுக்கும் சுகத்தைச்செய்பவன். சங்கரன் சங்கக்குழையன் என்பன ஒருபொருண்மேற் பலபெயர். தொண்டீர் என்பது விளிப்பெயர். நெஞ்சம் - ஆகுபெயர். தன் தாம் இங்கு என்பன அசை. மிறை - தீயசெயல். (சுசு)

67 எரிகின்ற தீயொத் துளசடை யீசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது சூழ்புன லப்புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணியொக் கின்றதத் தோணியுய்ப்பான்
தெரிகின்ற திண்கழை போன்றுள தாலத் திறவரவே.

பதவுரை:—ஈசற்கு சடை எரிகின்ற தீ ஒத்துள - இறைவனுக்குச் சடைகள் எரியும் நெருப்புப்போலுள்ளன, (அச்சடையிற்) சூழ்புனல் அத்தீக்கு இமையோர் சொரிகின்ற பாற்கடல்போன்றது - அச்சடையிற்சூழ்ந்த கங்கைநீர் அந்நெருப்பிணையவித்தற்குத் தேவர்கள் சொரிகின்ற பாற்கடலையொத்தது, அப்புனலிற் சரிகின்றதிங்கள் ஓர் தோணி ஒக்கின்றது - அக்கங்கையிற் றவழ்கின்ற பிறை ஒரு தோணியை ஒத்திருக்கின்றது, அத்திற அரவு அத்தோணியுய்ப்பான் தெரிகின்ற திண்கழைபோன்றுளது - (அப்பிறையொடு பகைதீர்ந்துறைகின்ற) வலிய பாம்பு அத்தோணியை இயக்கத் தெரிந்தெடுத்த வலிய மூங்கிற்கழியை ஒத்திருக்கின்றது.

குறிப்புரை:—ஆல் அசை. செல்வமனைத்தும் அளிப்பவனாகலின் ஈசனென்றார். கங்கைநீர் வெள்ளியதாதலின் பாற்கடலை உவமைகூறினார். (சுஎ)

68 அரவ முயிர்ப்ப வழலுமங் கங்கை வளாய்க்குளிருங்
குரவங் குழலுமை யூடற்கு நைந்துரு கும்மடைந்தார்
பரவும் புகழண்ண றீண்டலும் பார்வா னவைவிளக்கும்
விரவு மிடரின்ப மெம்மிறை சூடிய வெண்பிறையே.

பதவுரை:—எம் இறை சூடிய வெண்பிறை - எம் இறைவனாகிய சிவபெருமான் அணிந்த வெள்ளிய பிறை, அரவம் உயிர்ப்ப அழலும் - பாம்புகள் பெருமூச்செறிய வெம்பும், கங்கை வளாய்க் குளிரும் - கங்கைவிரவிக் குளிர்ச்சியடையும், குரவம் குழல் உமை ஊடற்கு நைந்து உருகும் - குராமலர்களையணிந்த கூந்தலையுடைய உமையம்மைபிணக்கினால் மெலிந்து உருகா நிற்கும், அடைந்தோர் பரவும் புகழ் அண்ணல் தீண்டலும் பார் வான் அவை விளக்கும் - அடைந்த அன்பர் பரவுகின்ற புகழுடைய இறைவன் தீண்டுதலும் மண்ணும் விண்ணுமாகியவற்றை விளங்கச்செய்யும், இடர் இன்பம் விரவும் - (இவ்வாறு முறையே) துன்பமும் இன்பமும் அடையும். (சுஅ)

69 பிறைத்துண்டஞ் சூடலுற் றேபிச்சை கொண்டன லாடலுற்றே
மறைக்கண்டம் பாடலுற் றேவென்பு நீறு மருவலுற்றே
கறைக்கண்டம் புல்லலுற் றேகடு வாயர வாடலுற்றே
குறைக்கொண் டிவளரன் பின்செல்வ தென்னுக்குக் கூறுமினே.

பதவுரை:—பிறைத்துண்டம் சூடுதற்கோ - பிறைத்துண்டத்தினை அணிவதற்கோ, பிச்சைகொண்டு அனலாடலுற்றோ - பலியேற்று நெருப்பின்கண் ஆடவோ, மறைக்கண்டம் பாடலுற்றோ - வேதத்தைச் சுரத்தோடு பாடுவதற்கோ, என்பும் நீறும் மருவலுற்றோ - எலும்பும் விபூதியும் அணிவதற்கோ, கறைக்கண்டம் புல்லலுற்றோ - களங்கத்தைக் கழுத்திற் பொருந்தச்செய்தற்கோ, கடு வாய் அரவாடலுற்றோ - விடம்பொருந்திய பாம்பை ஆடல்செய்வதற்கோ, இவள் குறைக்கொண்டு அரன்பின்செல்வது என்னுக்கு கூறுமின் - இவள் குறைநேர்ந்து சிவன்பின்செல்வது எதன்பொருட்டு? சொல்லுங்கள்.

குறிப்புரை:—ஓகாரங்கள் ஐயப்பொருளன. என் வினைப்பெயர்; நான்கனுருபேற்று என்னுக்கு என நின்றது. பிறைத்துண்டமென்றது ஒற்றைக் கலையை. பிச்சையென்றது முற்றத்துறந்தமுனிவர்பெறும் இரப்பன்னத்தை.

இவள் குறைகொண்டு அரன்பாற்சேறல் எற்றுக்கென்று இழித்துக் கூறினாள். (சுகூ)

70 கூறுமி னீசனைச் செய்ம்மின்குற் றேவல் குளிர்மின்கண்கள்
தேறுமின் சித்தந் தெளிமின் சிவனைச் செறுமின்செற்றம்
ஆறுமின் வேட்கை யறுமி னவல மிவைநெறியா
ஏறுமின் வானத் திருமின் விருந்தா யிமையவர்க்கே.

பதவுரை:—ஈசனைக் கூறுமின் - இறைவன் திருநாமத்தைச் சொல்லுங்கள், குற்றேவல்செய்ம்மின் - அவனுக்குக் குற்றேவல்களைச்செய்யுங்கள், கண்கள் குளிர்மின்-அவனைத்தரிசித்துக் கண்குளிருங்கள், சித்தம் தேறுமின் - மனம் தெளிவுபெறுங்கள், சிவனைத் தெளிமின் - சிவபிரானே (பரம்பொருளென்று) தெளியுங்கள், செற்றம் செறுமின்-பகையை அழியுங்கள், வேட்கை ஆறுமின்-ஆசையைத் தணியுங்கள், அவலம் அறுமின்-இளிவரவை ஒழியுங்கள், இவை நெறியா (க)-மேற்கூறிய இவைகளே வழியாக, வானத்து ஏறுமின் - வீட்டுலகத்தையடையுங்கள், இமையவர்க்கு விருந்தாய் இருமின் - தேவர்களுக்கு விருந்தினராக விளங்குகள்.

குறிப்புரை:—விருந்து ஆகுபெயர். இமையவர் - வானவர். (எ0)

71 இமையோர் கோணர்ந்திங் கிழித்திட நீர்மைகெட் டேந்தல்பின்போய்
அமையா நெறிச்சென்றே ராழ்ந்த சலமக ளாயணைந்தே
எமையா ளுடையான் றலைமக ளாவங் கிருப்பவென்னே
உமையா ளவள்கீ ழுறைவிடம் பெற்றே வுறைகின்றதே.

பதவுரை:—(கங்கையானவள்) இமையோர் இங்கு கொணர்ந்து இழித்திட - வானோர்கொணர்ந்து இங்கே இறங்கச்செய்ய, நீர்மைகெட்டு-தன்மை சிதைந்து, ஏந்தல்பின்போய் - அரசனாகிய பகீரதன்பின் படர்ந்துசென்று, அமையாநெறிச்சென்று - பொருந்தாவழியில் நடந்து, ஓர் ஆழ்ந்த சலமகளாய் அணைந்து - ஒப்பற்ற நீர்மகளாய் அணுகி, எ(ம்)மை ஆள் உடையான் தலைமகளா அங்கிருப்ப - எங்களை ஆட்கொண்டருளிய இறைவன்சடைமுடிமேல் தலைமகளாயிருக்க, உமையாள் - உமாதேவியானவள், அவள்கீழ் இடம் உறைவுபெற்று உறைகின்றது என்-அக்கங்கையின்கீழ் வாமபாகத்தை உறைவிடமாகப்பெற்று வசிக்கின்றது என்னகாரணம்?.

குறிப்புரை:-தேவருலகினில் மந்தாகினியாயிருந்தமையால் 'இமையோர் கொணர்ந்'தென்றும், அத்தன்மையழிந்து, பகிரதன்வேண்டச்சென்று

அவன்பின்படர்தலால் 'இங்கிழித்திட நீர்மைகெட் டேந்தல்பின்போய்' என்றும், மிகவேகமாய் அணவதுகண்டு சன்னுமுனிவனுண்டு காதின்வழிவிடுத்தலால் 'அமையாநெறிச்சென்' றென்றும், இறைவன்சடைமுடியிற் புனலுருக்கொண்டுகரந்தமையால் 'ஆழ்ந்தசலமகளாயணங்தே தலைமகளா அங்கிருப்ப' என்றும், அவள்கீழ் உமை வாமபாகத்துறைவது என்னபெற்றியென்பார் 'என்னே உமையாள் அவள்கீழ் உறைவிடம் பெற்றுறே வுறைகின்றதே' என்றும் கூறினர். இதனுள் இழித்திட என்பது பூமியில் இறங்கச்செய்ய எனவும் தாழ்த்த எனவும், நீர்மைகெட்டு என்பது நீர்வற்றி எனவும் தன்மைகெட்டு எனவும், ஓர்ஏந்தல்பின்போய் என்பது பகிரதன்பின்போய் எனவும் அயலானாகிய ஓராண்மகன்பின்போய் எனவும், அமையாநெறிச்சென்று என்பது சன்னுமுனிவர்யாகசாலையில் அது அழியும்படி நெறியல்லாநெறியாற்சென்று எனவும் கற்புடைமகளிர்க்கொவ்வாதநெறியிற் சென்று எனவும், சலமகளாய் என்பது நீர்மகளாயெனவும் வெறுக்கத்தக்கபெண்ணாய் எனவும், தலைமகளா என்பது தலையின்கண் உள்ள மகளாக எனவும், சிறந்தவளாக=முதன்மையுடையவளாக எனவும் பொருள்கொள்ளநின்றமை ஊன்றிநோக்கி உவத்தற்குரியது. (எக)

72 உறைகின் றனரைவ ரொன்பது வாயிலோர் மூன்றுளதால்
மறைகின்ற வென்பு நரம்பொ டிறைச்சி யுதிரமச்சை
பறைகின்ற தோல்போர் குரம்பை பயனில்லை போயடைமின்
அறைகின்ற தெண்புனல் செஞ்சடைக் கொண்டோன் மலரடிக்கே.

பதவுரை:—உறைகின்றனர் ஐவர் - உடம்பாகிய வீட்டில் ஐம்புலவேடர் வசிக்கின்றனர், ஒன்பது வாயில்-ஒன்பது வாயில்கள் உள்ளன, ஓர் மூன்று மறைகின்ற நரம்பு உளது - மூன்று மறைந்திருக்கின்ற நரம்புகள் உள்ளன, என்பொடு இறைச்சி உதிரம் மச்சை பறைகின்ற தோல்போர் குரம்பை பயனில்லை - எலும்பு இறைச்சி இரத்தம் மச்சை முதலியவற்றின்மீது தோலாற் போர்வையிடப்பட்ட சிற்றில் பயனற்றது, அறைகின்ற தெண் புனல் செஞ்சடைகொண்டோன் மலரடிக்கு போயடைமின் - ஒலிக்கின்ற தெளிந்தநீரைச் சிவந்தசடையிற்கொண்ட சிவபிரானது தாமரைமலர் போன்ற திருவடியைச் சென்றடையுங்கள்.

குறிப்புரை:—ஐவரென்றது தொகைக்குறிப்பு. ஓர் மூன்று மறைகின்ற நரம்பு என்றது வாத பித்த கப நாடிகளை. தெண்புனல் செஞ்சடைக்கொண்டோன் என்றார் கங்காதரன் என்னும் பெயர்பற்றி. (எஉ)

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	சஞூநூல் (5) இனியதுநாற்பது (உரையுடன்) ...	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்) ...	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ...	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100)...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0

56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தாஞ்ஜலி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

குறிப்பு:-ஸ்டாக்கிலில்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 44 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. புத்தகவியாபாரிகள் வாங்கும் சங்கப்பிரசுரங்களுக்குச் சர்க்கார் உத்திரவுப்படி 100-க்கு 15 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணன், மானேஜர்.